பக்கங்கள் எட்டு

விலை ரூபா 5-00 Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

**அர்ச்சனா ஜுவலர்ஸ்**

118, கஸ்தூரியார் வீதி 176/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[கி-2127]

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 3 வியாழக்கிழமை (19-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 2?0

### யாழ். மாநகரசபையின்
## சு. வை. அதிகாரியாக மீண்டும் டாக்டர் தெய்வேந்திரன் பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரியாக வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் நேற்று மீண்டும் தனதுபணியை பொறுப்பேற்றுக்கொண்டார்.

யுத்த சூழ்நிலையில் கடந்த பதினொரு வருடங்களாக யாழ் மாநகர சபையில் சிறப்பாக பணியாற்றிய டாக்டர் தெய்வேந்திரனுக்கு சட்டத்திற்குப்புறம்பாக- முறையற்ற முறையில் முன்னாள் பதில் ஆணையாளர் இராசா தணிகாசலம் கட்டாய லீவு வழங்கியிருந்தார். இதனை எதிர்த்து சுகாதாரப் பகுதி ஊழியர்கள், ஆர்ப்பாட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்தியியிருந்தனர்.

டாக்டர் தெய்வேந்திரனின் சேவையை மீண்டும் யாழ் மாநகர சபை பெற்றுக்கொள்ள வேண்டுமென சுகாதாரப் பகுதி ஊழியர்கள் சன சமூக நிலையங்கள், தொண்டர் சபைகள், சுகாதாரக் குழுக்களென பலதரப்

[8ஆம் பக்கம் பார்க்க]

### பாராளுமன்றத்தில்
## மீண்டும் கூடுவதற்கு எதிர்க்கட்சிகள் முடிவு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து நாளை வெள்ளிக்கிழமை மீண்டும் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தை பாராளுமன்றக் கட்டிடத்திற்குள் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இந்த நடவடிக்கைதொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஜே. வி. பியினருடன் பேச்சுவார்த்தை நடத்திய போது இதற்கு ஆதரவு வழங்குவதாக ஜே. வி. யினர் ரணிலிடம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சர்வஜன வாக்குரிமைக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஜே வி. பியும் இணைந்து செயற்படுவதெனவும் உடன்பாடு காணப்பட்டுள்ளது. (வ)

### ஆசிரியர்களின்
## சுகயீனலீவு போராட்டம் நடைபெறாது

(திருகோணமலை)

தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட சுகயீன லீவுப் போராட்டம் திட்டமிட்டபடி நாளை நடைபெறாதென பொதுச் செயலாளர் மகாசிவம் அறிவித்துள்ளார். (ந)

### பொலிஸாரின் தடையையும் மீறி
# கொழும்பு மாநகரில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

### எந்நேரமும் கலவரம் வெடிக்கும் அபாயம்

(நமது நிருபர்)

**தமிழ்க்கட்சிகளின் ஆதரவுடன் ஐக்கியதேசியக்கட்சி உட்பட சிங்கள பேரினவாத அமைப்புக்கள் ஒன்றிணைந்து இன்று தலைநகர் கொழும்பில் நடைபெறவுள்ள ஆறுமுனை ஆர்ப்பாட்டப் பேரணிக்கு, பொலிஸார் தடைவிதித்துளளதை அடுத்து தென் இலங்கையில் கலவரயவெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும், பொது ஜனஐக்கிய முன்னணி அரசிற்கும் எதிராக இன்று நடத்தவிருந்த ஆர்ப்பாட்ட பேரணிக்கு பொலிஸார் தடைவிதித்துள்ளனர்.

இன்று ஆறுபிரதான பாதைகளூடாக நடத்தவிருந்த ஊர்வலத்திற்குப் பாதுகாப்புக்கோரி ஐக்கிய தேசியக் கட்சி பொலிஸாருக்கு விண்ணப்பித்திருந்தது.

சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறவிருக்கும் சந்தர்ப்பத்தில் 1981ம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பு 7வது

[8ஆம் பக்கம் பார்க்க]

### நாடு குழம்பிய நிலையில்
## சபாநாயகர் 21ந் திகதி வெளிநாடு பயணம்

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா மீது எதிர்க்கட்சியினர் குற்றவியல் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரும் இச்சந்தர்ப்பத்தில் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா 21மதிகதி சனிக்கிழமை வெளிநாடொன்றுக்கு பயணமாகவுள்ளதாக பாராளுமன்றவட்டாரங்கள் தெரிவிததுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத்தை ஒத்தி வைத்திருக்கும் இவ்வேளையில், ஜனாதிபதிமீதானகுற்றவியல் பிரேரணையை ஏற்றுக்கொள்வதைத் தவிர்ப்பதற்காகவே நாடு திரும்பும் திகதி குறிப்பிடாது சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவெளிநாடு செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் இல்லாமல் பிரேரணை ஒன்றைக் கொண்வருவதானால் அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு தேவை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## ஊர்வலத்தை தடுக்கும் அதிகாரம் பொலிஸாருக்குக் கிடையாது

### நீதி அமைச்சர் பட்டிவீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

அவசரகாலச்சட்டம் தற்போது அழுலில் இல்லாதபடியால் ஊர்வலங்களுக்கு பொலிசார் தடைவிதிக்க முடியாது என நீதியமைச்சர் பட்டிவீரக்கோன தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கட்சியினர் தலைமையில் இன்று நடைபெற உள்ள ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்குப் பொலிசார் விதித்த தடை குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் பட்டி வீரக்கோன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அவசரகாலச் சட்டம் நாட்டில் தற்போது நடைமுறையில் இல்லாமையால் ஊர்வலமெதனையும் தடை செய்யும்அதிகாரம் பொலிசாருக்கு இல்லையென்றும் அவர் தெரிவித்தார். [ந]

### முகைதீன் எம்பியின் வீட்டிற்கு கிரனேற் வீச்சு
### 3 பொலிசார் காயம்

(சம்மாந்துறை)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பராளுமன்ற உறுப்பினர் (திருமதி பேரியல் அஷ்ரப்பின் அணி) யூ. எல் ஐ முகைதீனின் வீட்டுககு இனந்தெரியாதோர் நேற்றிரவு 7 30 மணியளவில் மேற்கொண்ட கிரனேற் தாக்குதலில் அங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த மூன்று பொலிசார் காயங்களுக்குள்ளானார்கள்.

காயமடைந்த மூன்று பொலிசாரில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (வ)

### முஸ். காங்கிரஸ் அலுவலகம் குண்டு வைத்து தகர்ப்பு
### கல்முனையில் சம்பவம்

(கல்முனை)

கல்முனையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அலுவலகம் ஒன்று நேற்று அதிகாலை 4 45 மணியளவில் இனந்தெரியாதோரால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது அலுவலகத்தில் எவரும் இருக்கவில்லை என்றும், அடுத்தடுத்து நான்கு குண்டுகளை அங்கு வெடிக்கவைத்ததாகவும், இக்குண்டுச் சத்தங்களினால் கல்முனைப்பிரதேசம் அதிர்ந்ததாகவும், கல்முனைப்பகுதி மக்கள் தெரிவித்துள்ள இதேவேளை அரு

[8ஆம் பக்கம் பார்க்க]

## 1983 யூலை கலவரத்தை விசாரிக்க ஜனாதிபதி தலைமையில் ஆணைக் குழு

(கொழும்பு)

1983யூலைமாதம் நாட்டில் இடம்பெற்ற கலவரம்தொடர்பாகவிசாரணைசெய்வற்கு ஆணைக்குழு வெள்ளியன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாதலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இந்தஆணைக்குழுஅமைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் அமைச்சர் அத்தாவுட செனிவிரத்தினா பிரதிஅமைச்சர் என்.கணேச

[8ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம் 300, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஸ்தாபனத்திற்கு கணக்காளர், விற்பனையாளர், டைபிஸ்ட்டர்ஸ் ஆகியவற்றிற்கு இருபாலரும் உடன் தேவை. நேரில்வரவும். அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை.

(C/ 2243)


## இன்ரநெற் இணைப்பு

(கொழும்பு)

தலதா மாளிகையின் வரலாறு, புனித தந்தத்தின் வரலாறு, தலதா மாளிகையில் நடைபெறும்சமய விழாக்கள், சங்குகா பெரஹரா, தியவதன நிலமேயின் நிர்வாக பீடம், மல்வத்தை, அஸ்கிரிய பீட மகாநாயக்கர்களின் சேவைகள் என்பவற்றை ஜூலை 25 ஆம் திகதியிலிருந்து உலக இன்ரநெற் இணையத்தின் மூலம் அறியும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (உ)

## போஷாக்குத் திட்டம்

(தென்மராட்சி)

யாழ் மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள தரம் ஒன்றில் கல்வி பயில்கின்ற சுமார் 8 ஆயிரம் சிறுவர்களுக்கு போஷாக்குத்திட்டமொன்று செயற்படுத்தப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் ஈ.பி.டி.பி.காரியாலயத்தில் நடைபெற்ற கல்வியாளர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்கில் தெரிவித்தார். (உ-77)

## யா. மாவட்டப் பாடசாலைகளில் கடல்நீர் உயிர்வள தொழில்நுட்ப பாடத்தை ஆரம்பிக்க கோரிக்கை

(புலோலி)

தெரிவு செய்யப்பட்ட, யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் க.பொ.த.(சா/த)தர வகுப்பில் கடல்நீர் உயிர்வளத் தொழில்நுட்பம், நன்னீர் உயிர்வளத்தொழில்நுட்பம் ஆகிய பாடங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு ஆகியோரிடம் கோரியுள்ளது.

அக்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

யாழ் பல்கலைக்கழகத்தில் 1999 ஆம் ஆண்டு மீன்பிடியியல்டிப்ளோமாபயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டு 43 பேர் கற்று வெளியேறியுள்ளனர்.

தற்போது இப்பயிற்சி நெறிக்கான இரண்டாவது தொகுதியினர் உள்வாங்கப்பட்டுள்ளனர். இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறியவர்களுக்கு இது வரை எந்தவிதமான வேலைவாய்ப்புகளும் வழங்கப்படவில்லை.

முன்னர் பாடசாலைகளில் கடல்நீர் உயிர்வள தொழில்நுட்பம் நன்னீர் உயிர்வள தொழில்நுட்பம் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இருக்கவில்லை தற்போது இப்பாடங்களைப் போதிப்பதற்கு ஆட்கள்உள்ளார்கள்.

ஆகவே தேவைப்படும் பாடசாலைகளில் இத்தொழில்நுட்பப்பாடங்களை ஆரம்பிக்கவேண்டும்.

யாழ் மாவட்டத்தில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி நடைபெற்ற உயர்கல்வி மகாநாட்டில் இந்த ஆசிரியர்களை நியமிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென உறுதி கூறப்பட்டது ஆனால்இன்றுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் மீன்பிடி பாடங்கள் கற்பித்தல் பற்றி மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கத்தினால் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட கடல்வள கல்வி கருத்தரங்கில், வடமராட்சி வலயத்தில் 20 பாடசாலைகளிலும், வலிகாமம் வலயத்தில் 09 பாடசாலைகளிலும், யாழ். வலயத்தில் 9 பாடசாலைகளிலும்,தீவக வலயத்தில் 12 பாடசாலைகளிலும் இம்மீன்பிடியியல் பாடங்களை ஆரம்பிக்கும்படி கோரிக்கையும் விடப்பட்டது

எனவே காலதாமதமின்றி பாடசாலைகளில் இப்பாடங்களை ஆரம்பிக்கவும், அதற்கான ஆசிரியர்களை நியமிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். (உ-52)

## அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழாதினமாகிய இன்று காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களின் மாவைக்கந்தன் அன்னதானசபை அடியார்களுக்கு வழமைபோல் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்துள்ளது (செ)

## இருவர் கைது

[கொழும்பு]

கடந்த திங்கட்கிழமை பி.ப. 1.00 மணியளவில் சுதுமலைப் பகுதியில் ஒரு சயனைட் குப்பியுடன் படையினர் இருவரைக் கைது செய்து மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது. [உ]

## மாட்டுவண்டி சவாரி

(அரியாலை)

தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி எதிர்வரும் 22ம் திகதிஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு கந்தரோடை சவாரித்திடலில் நடைபெறவுள்ளது. (செ-106)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

(நேற்றையதொடர்ச்சி)

ஜூலைமாதம் 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

| | |
|---|---|
| 192397 ஏ | 192406 ஏ |
| 192418 ஏ | 192428 ஏ |
| 192428 பி | 192433 ஏ |
| 192489 ஏ | 193574 ஏ |
| 193582 ஏ | 193600 ஏ |
| 193600 பி | 193625 ஏ |
| 193626 ஏ | 193626 பி |
| 193626 சி | 193656 ஏ |
| 193671 ஏ | 193689 ஏ |
| 193706 ஏ | 193764 ஏ |
| 193764 பி | 193771 ஏ |
| 193773 ஏ | 193773 பி |
| 193774 ஏ | 193776 ஏ |
| 193783 ஏ | 194201 ஏ |
| 194203 ஏ | 194385 ஏ |
| 194426 ஏ | 194427 ஏ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 175234 ஏ | 183464 ஏ |
| 191434 ஏ | 192434 பி |
| 191990 ஏ | 191990 பி |
| 191000 ஏ | 192050 ஏ |
| 192357 ஏ | 192303 ஏ |
| 192303 பி | 192303 சி |
| 192303 டி | 192313 ஏ |
| 192320 ஏ | 192320 பி |
| 192348 ஏ | 192354 ஏ |
| 192354 பி | 192463 ஏ |
| 192479 ஏ | 192480 ஏ |
| 193500 ஏ | 193500 பி |
| 193500 சி | 293525 ஏ |
| 193557 ஏ | 193560 ஏ |
| 193583 ஏ | 193665 ஏ |
| 193665 பி | 193665 சி |
| 193665 டி | 193666 ஈ |
| 193747 ஏ | 193777 ஏ |
| 194220 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 176525 ஏ | 185089 ஏ |
| 188733 ஏ | 188733 பி |
| 190565 ஏ | 190565 பி |
| 191800 ஏ | 191800 பி |
| 191932 ஏ | 191832 பி |
| 191945 ஏ | 191945 பி |
| 192955 ஏ | 191955 பி |
| 192324 ஏ | 192324 பி |
| 192399 ஏ | 192417 ஏ |
| 192424 ஏ | 192424 பி |
| 192424 சி | 192424 டி |
| 192482 ஏ | 192482 பி |
| 192482 சி | 192484 ஏ |
| 192485 ஏ | 192485 பி |
| 192436 சி | 193492 ஏ |
| 193605 ஏ | 193606 பி |
| 193627 ஏ | 193639 ஏ |
| 193639 பி | 193639 சி |
| 193733 ஏ | 193733 பி |
| 193760 ஏ | 193766 பி |
| 193766 சி | 193766 டி |
| 193766 ஈ | 193766 எப் |
| 193766 எச் | 194335 ஏ |
| 194335 பி | 194335 சி |
| 195363 ஏ | 194343 பி |
| 194365 ஏ | 194907 ஏ |

## புலிகள் - படையினர் வெலி ஓயாவில் மோதல்; படையினர் இருவர் பலி

(கொழும்பு)

வெலிஓயா, கோவில் பொயின்ற் பாதுகாப்பு முன்னரங்கை நோக்கி கடந்த ஞாயிறன்று அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், மூவர் காயமுற்றனர்.

இச்சம்பவத்தில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரும் காயமடைந்துள்ளதாக படைத் தரப்பினர் அறிவித்துள்ளனர்

இதேவேளை, கொல்லப்பட்ட படையினரின் உடல்களையும், அவர்களுக்குச் சொந்தமான இரண்டு ரி-56 ரகத் துப்பாக்கிகளையும், இரு தொலைத்தொடர்புக் கருவிகளையும் விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## எழுவைதீவில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு

(ஊர்காவற்துறை)

எழுவைதீவில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

170 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் இத்தீவின் குடிநீர்த்தட்டுப்பாட்டினை நீக்கும்முகமாக படகுபவுஸர் மூலம் நீர் ஊர்காவற்றுறையில் இருந்து கொண்டுசெல்வதற்கான திட்டத்திற்கு கடந்த இரு வருடங்களுக்கு முன்பு 5 லட்சம் நிதி ஒதுக்கியும் இவ்பவுஸர் மூலம் குடிநீர் எழுவைதீவுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது. (உ-75)


பிரமாண்டமான மின்னொளியில்
நவீன மயமான மாபெரும்
கண்காட்சியும் விற்பனையும்
(பூங்கன்றுகளும் கனிமரங்களும)

# பூங்கனிச் சோலை

காலம்: எதிர்வரும் 21ம், 22ம், 23ம்
(சனி, ஞாயிறு, திங்கள)

திகதிகளில் காலை 8 மணி முதல் இரவு 9.30 மணிவரை வடபகுதியிலே எங்குமே பார்த்திராத புதிய மெருகுடன் வடிவமைக்கப்பட்ட இயற்கை எழில் நிறைந்த பசுமையான காட்சிகளுடன் பூங்கனிச் சோலைக்குள் ஒரு பூங்கனிப் பூங்கா அமைந்துள்ளது.

- அலங்கார வளைவுகள்.
- இரண்டு தட்டு சூழல் இராட்டினம்
- பொறிமுறை உயர்த்தி
- தாமரைத் தடாகத்தினுள் தண்ணீர் - சிந்திகள்
- தண்ணீர் சிந்தும் பொம்மை
- பல வர்ண மின்குமிழ் பூம்பந்தல்
- சொகுசு ஊஞ்சல்
- தண்ணீர் தொட்டிகள்
- பல்லினப் பறவைகள்
- புல்மேடைகள்

எமது மண்ணில் உள்ள உள்ளூர் வளங்களைக் கொண்டு மேலைத்தேய காட்சிகளுக்கு நிகராக அமைந்துள்ள பூங்கனிச் சோலையின எழிலை நேரில் பார்த்து மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முடமாவடி,
திருநெல்வேலி.

(C/ 2239)
T P 2976


## காணாமற் போனோர் பற்றிய விசாரணைகளுக்காக உறவினருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து 1996 - 1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர் பின்வருவோர் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்வதற்கு வசதியாக அவர்களின் உறவினர்கள், சாட்சிகளை யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு சாட்சியங்களை வழங்குமாறு விசேடப் புலனாய்வுத் துறையினர் அறிவித்துள்ளனர்.

★ பரமேஸ்வரன் அன்னலக்சுமி, (கோ.இல.பி-101) வித்தியாலயம் வீதி சங்கரத்தை வட்டுக்கோட்டை

★ கந்தையா காசிதம்பி (கோ,இல,பி-108) மீசாலை மேற்கு

★ சரவணமுத்து சிறிதரன் (கோ இல பி-190) பழைய வாய்க்கால் மிருசுவில்

★ மகேஸ்வரி கணேசு (கோ இல.பி-88) நவாலி மானிப்பாய்

★ சுப்பன் இரத்தினம் (கோ இல பி-98 தொல்புரம் மேற்கு சுழிபுரம்

★ பரமநாதன் நகுலாம்பிகை, (கோ.இல பி-94) கச்சாய் வீதி கொடிகாமம்

★ ஆர். மேரிறோஸ், (கோ. இல.ஏ-15) 15/3 டேவிற் வீதி யாழ்ப்பாணம்

★ அந்தோனிப்பிள்ளை ஜஸ்மின் (கோ.இல பி-442) 13, புதிய பூங்கா வீதி குருநகர் யாழ்ப்பாணம் சாட்சி:- மாரியம்மா அந்தோனிப்பிள்ளை

★ வீரசிங்கம் வஜயகுமார், (கோ.இல.பி-4 5) கண்டி வீதி கொடிகாமம் சாட்சி:- சின்னவன் கந்தசாமி

★ சுப்பிரமணியம் முகுந்தகுமார், (கோ இல பி-106) 16, பலாலி வீதி யாழ்ப்பாணம் சாட்சி:- பொன்னுத்துரை

★ சேனாதி தாமபாலன், (கோ.இல.பி 464) 245, A B வீதி அரியாலை சாட்சிகள்:- தமயந்தி, மலர் தபாற் கட்டை சந்தி அரியாலை

★ வி. செல்வராஜ், (கோ.இல.பி-9/6, ஆனைக் கோட்டை வீதி கொக்குவில் சாட்சி;- இளவாலை தபால் அதிபர்

★ அந்தோனிப்பிள்ளை குயின்ரன் ராஜ்குமார், [கோ.இல.பி-9/145] 29 A கொண்டலடி வீதி குருநகர் சாட்சி:- றொபெட் சதீஸ்குமார்

★ நவரட்ணம் யோகேஸ்வரன், (கோ இல பி-408) பாடசாலை வீதி சங்கரத்தை சாட்சி:- கந்தையா நிமல்

★ ஜே. மதியழகன், (கோ: இல.பி-102) 12, தொல்புரம் மேற்கு சுழிபுரம் சாட்சி;- ஜே. ஜெபன் ஜயா (உ-10)

## இராணுவ முகாம் அமைப்பு

(ஏழாலை)

அளவெட்டி கும்பளை வயலை அண்டிய பகுதியில் புதிய இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (உ-12)

# புலம்பெயர்ந்து சென்றாலுமீழத்தவர் தமிழ்மண்ணின் பண்பு வழுவாது வாழ்வது பாராட்டத்தக்கது

## 18வருட வெளிநாட்டு அனுபவங்களைப் பகிர்கிறார் ஜெயசேகரம் அடிகளார்

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாக ஈழத்தில் இடம்பெற்று வரும் கொடும் யுத்தத்தின் காரணமாக இங்குள்ள மக்களையும், மண்ணையும், சொத்துக்களையும் விட்டு ஏனைய உலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றுள்ள 3 இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் அதிகமான ஈழ அகதிகள் தாம் வாழும் சூழலில் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்தும் எமது பாரம்பரியங்களை, தமிழ் மொழியின் தனித்துவத்தினை தமது சுயத்தை தொடர்ந்து நிலை நிறுத்தி வருவதை நாம் பாராட்ட வேண்டும்.

இவ்வாறு அருட் தந்தை அ. ஜெயசேகரம் அடிகளார் கடந்த ஞாயிறன்று திருமறைக்கலாமன்ற கலைத்தூதுபணி மண்டபத்தில் இடம் பெற்ற மாதாந்தக் கருத்தரங்கில் 'புலம்பெயர்வுச் சூழலில் தமிழர்கள்' என்ற தலைப்பில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கடந்த 18 வருடங்களாக ஜேர்மனி உட்பட பல்வேறு நாடுகளில் பணியாற்றி அண்மையில் இலங்கை திரும்பிய அருட்தந்தை அ. ஜெயசேகரம் பிறநாடுகளில் வாழும் ஈழத் தமிழ் அகதிகள் குறித்து தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது;

தமது மண்ணையும் மக்களையும் விட்டுப்பிரியும் கொடுமையானது ஒருவனை அணு அணுவாகச் சாகடிப்பதற்கு சமமானதாகும்.

இவ்வாறு பல்வேறு இன்னல்களைச் சுமந்து புலம்பெயர்ந்துள்ள ஈழ அகதிகளை பிரதானமாக மூன்று பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

அவையாவன, இந்தியா சென்ற அகதிகள், கனடா மற்றும் அமெரிக்கா சென்ற அகதிகள் ஐரோப்பிய நாடுகளுக்குசென்றுள்ள அகதிகள். இவ்வாறு தமது நாட்டை விட்டு பிறநாடுகளில் தஞ்சமடைந்திருக்கும் மக்களை 4ஆம் மண்டல நாட்டவர்கள் என சமூகவியலாளர்கள் வகைப்படுத்துவார்கள்.

இவர்களுள் இந்தியா சென்றுள்ள ஈழ அகதிகளின் தொகை ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டதாகும். இவர்களுள் 65 ஆயிரம் மக்கள் முகாம்களில் வாழ்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இது தவிர, முக்கியமாக கனடாவில் சுமார் 2 இலட்சத்து 40 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள். இவர்களுள் ரொறண்ரோவில் வாழும் ஈழ அகதிகளின் எண்ணிக்கை மட்டும் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டதாகும்.

இவ்வாறு எமது உடமைகள், உறவுகளை விட்டு ஏனைய நாடுகளில் தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரிச் சென்று அல்லலபட்டாலும் இதில் மகிழ்வடையக் கூடிய விடயம் எதுவென்றால், அங்கு சென்ற எமது மக்கள் தொடர்ந்தும் எமது பாரம்பரியம், மொழியின் தனித்தன்மை என்பவற்றைப் பேணுவதுதான்.

ஐரோப்பிய நாட்டில் வாழ்பவர்களைப் பொறுத்தவரை அவர்கள் அந்நாடுகளின் பொருளாதாரத்துள் கணிசமான அளவு ஊடுருவி ஒரு பொருளாதாரப் பலம் மிக்கவர்களாக மாறி இருப்பது மகிழ்வுதரக் கூடிய விடயமே.

எதிர் காலத்தில் எமக்கென்று ஒரு நாடு கிடைத்தால் அங்கு வேரூன்றிக் காணப்படும் பொருளாதார ரீதியான தமிழர்களின் பலம் எமது நாட்டை அபிவிருத்தி செய்ய பயன் படும் என்பதில் ஐயமில்லை அத்துடன் அங்கே காணப்படும் கோயில்கள், பாடசாலைகள் நூற்றுக்கணக்கான தமிழ்ப்பெயர்ப் பலகைகளைத் தாங்கி நிற்கும் கடைகள், என்பன எமது மொழியை, கலாசாரத்தைப் பறைசாற்றும் அம்சங்களாகவே காணப்படுகின்றன.

எனினும் இதில் கவலை கொள்ளக்கூடிய விடயம் யாதெனில் 1983 இற்கு முன் சென்ற ஈழத்தவர்கள் தம்மை வேறு ஒரு இனத்தவர்களாக, கனவான்களாக இனம்காட்டி அதற்கு பின் செல்லும் தமிழர்களை பொது நிகழ்வுகளில் ஒதுக்குவதுடன் தமது இன அடையாளத்தைக் கூட திரிபுபடுத்தி வெளியிடுவது தான். இது வெளிநாடுகளில் காணப்படும் ஒரு துர்ப்பாக்கியநிலை என்றுதான் கூறவேண்டும் என அவர் அக் கருத்தரங்கில் மேலும் தெரிவித்தார்.

(உ-9,106)

## ஆண்டு நிறைவும் விளையாட்டும்

(மந்திகை)

தென்புலோலி அறிவகம் சனசமூக நிலையத்தின் 46 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டு நிகழ்வும் நாளை அறிவகம் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூகநிலையத்தலைவர் சி. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கே.வி. குகேந்திரன் பிரதமவிருந்தினராகவும், பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

(செ-23)

## திருநாள் திருப்பலி

(ஈசசமோட்டை)

பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து ஒன்பது தினங்கள் திருப்பலி நடைபெற்று எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு, தேவநற்கருணை ஆராதனையும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியும் நடைபெறவுள்ளது.

[செ-59]

## உயர்தர மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம்

(கொழும்பு)

உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சாதாரணதர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் வழங்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி பரிசில் திட்டத்திற்குரிய விண்ணப்பங்கள் பிரதேச செயலகங்களூடாக அனுப்பப்பட வேண்டுமெனவும் கல்வியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது (செ-5)

## தேரேறி வந்தருள் முருகா

(மாவிட்டபுரம் கந்தனின் தேர் திருவிழாவை ஒட்டிய கவிதை)

எடுப்பு

வேல்கொண்டு விளையாடும் மயில்வீரனே - எங்கள்
வேதனைகள் தீர்மாவைப் பதிவாசனே

தொடுப்பு

மாருதப் புரவல்லி தனக்குற்றதோர் - குன்ம
பிணிநீக்கி அருளசெய்த காங்கேயனே

முடிப்பு

இருள்கொண்ட நிலைநீங்கி ஒளிவெள்ளம் பாய
இடர்நீங்கி வளமோடும நாமவாழ்ந்த மண்ணில்
அருளகொண்டு எமைநாளும் காத்துவழிகாட்டி
அற்புதனே பணித்தேரில் ஏறிவலம் வருவாய்
குறமாதும் குஞ்சரியும் சூழநடம் பயின்றே
குறைதீர்த்து எமையாள இதுவேளை என்றே
அறநெறிகள் தான்வாழ அதர்மநெறி போக்கி
ஆறுமுகப் பெருமானே வேலேந்தி வருவாய்

சு. குகதேவன்
க.கு அ.இல.117
தெல்லிப்பழை

## மீளாய்வு செய்ய பணிப்பு

(அரியாலை)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குள் மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் எதிர்வரும் 23 ம் திகதிக்கு முன்னர் தத்தமது பகுதி கிராம உத்தியோகத்தரிடம் குடும்ப அட்டை மற்றும் அடையாள அட்டையுடன் சென்று மீளாய்வு செய்யும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

(செ-106)

## அலங்கார உற்சவம்

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் சக்கணபதி முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 5 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

(செ-75)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு 6 உறுப்பினர்கள் நியமனம்

(புலோலி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் உபதலைவர் பதவியும், ஆறு உறுப்பினர்கள் பதவியும் நிரப்பப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கிறார்.

இதில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த சில்வஸ்ரர் அலன் டின் யூட் உப தலைவராகவும், சிற்றம்பலம் நவசோதி, செபஸ்ரியன் இராசப்பு, சின்னத்தம்பி இராசா தர்மராஜா ஜெயராஜா ஆகியோரும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தைச் சேர்ந்த செல்வி பொன்னையா மதுரசீலி, திருமதி. சுமங்கலி, கனகரத்தினம் ஆகியோரும் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் மொத்த உறுப்பினர் தொகை 18 என்றும் தற்போதைய, தேர்தல் ஆணையாளரின் நியமனத்தைத் தொடர்ந்து 18 உறுப்பினர்களும் செயற்படக்கூடிய நிலை இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது (உ-52)

## வீதி அபி. அதிகாரசபையால் கோப்பாய்- கைதடி வீதி செப்பனிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சென்ற மாதம் 25 ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம் பெற்ற கைதடி மீள் குடியேற்றக் கூட்டத்தில் மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அமைச்சரின் அறிவுறுத்தலின் பிரகாரம் கோப்பாய்- கைதடி வீதியை, வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் அண்மையில் செப்பனிட்டனர்.

இதேவேளை, மேற்படி வீதியை படையினர் பொது மக்களின் உதவியுடன் செப்பனிட்டதாக முன்னர் பத்திரிகையில் வெளியான செய்தியை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்ப்பாணப் பொறியியலாளர் ஜே ஸ்ரீனிவாசன் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது

[து]

## காய்ச்சல் நோயாளர் அதிகரிப்பு

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் வேகமாகப் பரவிவரும் காய்ச்சல் மற்றும் வாந்திபேதி நோய் காரணமாக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அவ் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன,

(உ-23)

## 12 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய பாடசாலைகளும் உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் 12 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் விளையாடவுள்ள பாடசாலைகளின் விபரம் வருமாறு;

பி. ப. 2. 45மணிக்கு அச்சுவேலி மத்திய கல்லூரியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயமும், பி. ப. 3 30 மணிக்கு இடைக்காடு மகா வித்தியாலயத்தை எதிர்த்து உரும்பிராய் றோ. க. பாடசாலையும், பி. ப. 4. 10 மணிக்கு தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்தை எதிர்த்து கோப்பாய்கிறிஸ்தவக்கல்லூரியும், பி. ப. 4 50மணிக்கு கோப்பாய் சரவணபவானந்தன் வித்தியாலயத்தை எதிர்த்து ஊரெழு கணேச வித்தியாலயமும், மோதவுள்ளன.

இன்று கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானத்தில் விளையாடவுள்ள பாடசாலைகளின் விபரம் வருமாறு;

பி. ப. 2. 45 மணிக்கு புனித யோசப் வித்தியாலயத்தை எதிர்த்து வைத்தீஸ்வராக் கல்லூரியும், பி. ப. 3. 30 மணிக்கு இடைக்காடு மகாவித்தியாலயத்தை எதிர்த்து உரும்பிராய் றோ. க. பாடசாலையும், பி. ப. 4. 10மணிக்கு தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்தை எதிர்த்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும், பி. ப. 4. 50 மணிக்கு முத்துத் தம்பி மகாவித்தியாலயத்தை எதிர்த்து கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயமும் மோதவுள்ளன.

(செ-110)

## காவலூரில் மலேரியா தடுப்பு நடவடிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின்கீழ்உள்ள அல்லைப்பிட்டியில் மலேரியாநோய் தடுப்பு நடவடிக்கை இடம் பெற்று வருகின்றது.

அந்தவகையில் அல்லைப்பிட்டியில்உள்ள குளங்கள் அனைத்துக்கும் மலேரியா நுளம்புக்குடம்பிகளினை அழிப்பதற்காக அபேட் என்னும் மருந்து தெளிக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே வீடுகள், பொது இடங்கள் என அல்லைப்பிட்டியில் மலேரியா நுளம்புத்தாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் முகமாக மலத்தியோன் விசிறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நடவடிக்கையில் வெளிக்கள சுகாதார உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள் என ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி ச. திவ்விய குமாரன் தெரிவித்தார்.

(உ-75)

## இருமாத சிறைத்தண்டனை

(மந்திகை)

தென்மராட்சிப் பகுதியில் தேங்காய் மற்றும் வீட்டுத் தளபாடங்களைத் திருடினார் என்ற சந்தேகத்தின் பெயரில் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பின் ஆட்பிணையில் விடுவிக்கப்பட்ட நபர் தலைமறைவானதைத்தொடர்ந்து, பிணையாளிகளான தந்தை உட்பட மூவரை இருமாத காலம் மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

(உ-23)

# தொடரும் யுத்தத்தினால் வடமாகாணத்தில்
# 3 ஆண்டுகளில் 2ஆயிரத்து 123சிறுவர்கள்பலி

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் கடந்த மூன்று வருடங்களில் மட்டும் 2ஆயிரத்து 123 சிறுவர்கள் யுத்தத்தினால் பலியாகியுள்ளனர் என சிறுவர் நலன் பேணும் அரசசார்பற்ற நிறுவனமொன்றினால் திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

மேலும் யுத்தத்தின்போது ஒருவயது முதல் 13 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர், சிறுமிகளே தாக்குதல்களின்போது இடையே சிக்கி உயிர் இழந்துள்ளனர்எனவும் அதிகமான சிறுவர்கள் ஷெல்தாக்குதல், விமானக் குண்டுவீச்சு, துப்பாக்கிச்சூடு, கண்ணிவெடி மற்றும் மிதிவெடிகளில் சிக்கியுமே உயிர் இழந்துள்ளனர் எனவும் தெரிகின்றது.

மேற்படி நிறுவனம்மேற்கொண்டஆய்வுகளின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தில் 894 சிறுவர்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 543 சிறுவர்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 41 சிறுவர்களும், வவுனியா மற்றும்மன்னார் மாவட்டங்களில் 275 சிறுவர்களும் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, மேற்படி மாவட்டங்களில்இடம்பெற்ற சிலஉயிரிழப்பு சம்பவங்கள் பற்றிய விபரங்கள் பதியப்படாத சூழ்நிலையும் காணப்படுவதாக இந்நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

(உ-77)

## காலநடை வைத்தியர் அறிவிப்பு

(புலோலி)

வீட்டு வளர்ப்பு மிருகங்களுக்கு ஆண்மை நீக்கச்சத்திர சிகிச்சை, கருத்தடைச் சத்திர சிகிச்சைகள் பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில்நடைபெற்று வருவதாக பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். வசீகரன் அறிவித்துள்ளார்.

கால்நடைகளுக்கு இச்சிகிச்சையைச் செய்ய விரும்புவோர் அதற்கு முன்கூட்டியே தமது அலுவலகத்தில் பதிவு செய்யுமாறுமேலும தெரிவித்துள்ளார். (உ-52)

## செய்தித் துளிகள்

### ஆண்டு விழாவும் பரிசளிப்பும்

(புலோலி)

பருத்தித்துறை கூவில் தீ.ப்ஜ தி சனசமூகநிலையத்தின் 27வது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை நிலையத் தலைவர் ஆ. கி. தம்பி முத்து தலைமையில் நடைபெறவுள்ளன.

இவ்விழாவின் போது இல்ல விளையாட்டுப் போட்டிகளும் வெளி கழகங்களுக்கான, வலைப்பந்தாட்ட போட்டிகள், கரப்பந்தாட்டப் போட்டிகள், கயிறு இழுத்தல்போட்டிகள், மரதன ஓட்டப் போட்டிகள் என்பனவும் இடம் பெறவுள்ளன.

(செ-52)

### திருடர் கைவரிசை

(கோப்பாய்)

கோப்பாய் இராசவீதிப் பகுதிகளிலுள்ள தோட்டங்களில் திருடர்கள்தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் தென்னை மரங்களில் தேங்காய் பறிக்கப்படுவதுடன் கிணற்றடிகளில கட்டப்பட்டுள்ள அறைகளை உடைத்து அவற்றுள் வைக்கப்பட்ட மண்வெட்டி, மருந்துவகைகள், வாளிகள் கிணற்றிலும் வெளியிலும் பொருத்தப்பட்டுள்ள பைப் வகைகளை திருடர் எடுத்துச்செல்வதாகவும் வீதியில பொருத்தப்பட்டுள்ள மின் குமிழ்கள இவர்களால் சேதப்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது. (உ-79)

### முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு சரஸ்வதி பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் கொக்குவில் நாமகள் வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00மணிக்கு வளர்மதி முன்னேற்றக்கழக மகளிர் குழுத்தலைவி திருமதி கோமதி ரவிதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இவ் விளையாட்டுப் போட்டியில ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட பிரதி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபைத் தலைவருமான க. மணிபல்லவராஜன பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் சர்வோதயம் செயற்திட்ட நிறைவேற்றுநர் எஸ். வி. சங்கரப்பிள்ளை, இளைப்பாறிய அதிபர் இ மகேந்திரன், கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபர் பொ. பத்மநாதன், இளைப்பாறிய அதிபர் த அழகரெத்தினம், கொக்குவில் மத்தி கிழக்கு கிராம சேவையாளர் கு சாந்தமோகன், யாழ் கல்விவலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி க. பிரகதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(உ)

### ம. வி. முன்னணி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஜனநாயக விரோதச் செயல்களை கண்டித்தும் சர்வஜன வாக்கெடுப்பை எதிர்த்தும் மக்கள் விடுதலை முன்னணி 23 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஒன்றுசேரும் பெருந்திரளான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளனர் என்று மக்கள்விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விமலவீரவன்ச தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசின் சர்வாதிகாரப் போக்கைக்கண்டித்தும் பாராளுமன்றத்தைக கூட்ட வேண்டுமென்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும்கண்டனசுவரொட்டிகளையும் மக்கள் விடுதலை முன்னணியினர் ஒட்டியுள்ளனர்.

(இ)

### சான்றிதழ் வழங்கல்

(அரியாலை)

யாழ்ப்பாண துடுப்பாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தின் கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான சான்றிதழ் வழங்கல் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்குயாழ். இந்துக் கல்லூரியில நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் குழுநிலைப் புகைப்படம் எடுக்கப்படவுள்ளதால் சங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பினர்களையும் சீருடையுடன் வருகை தருமாறு சங்கத்தின் செயலாளர் சு சிறீகாந்தன் கேட்டுள்ளார். (மச-06)

### விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை சாவற்கட்டு மகாத்மா பாலர் பாடசாலை விளையாட்டு விழா இன்று பி. ப. 2.00 மணிக்கு மகாத்மா சனசமூக நிலையத தலைவர் த. விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார். (மச)

### பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியனின் கைதை ஆட்சேபித்து வகுப்பு புறக்கணிப்பில் ஈடுபட்ட உயர்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள், மேற்படி மாணவன் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து புதன்கிழமை முதல் தமது வகுப்புப் புறக்கணிப்பைக கைவிட்டனர். (உ-24)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப்பேரவையினரின் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10:30 மணிக்கு, வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் பொ அருந்தவநாதனின் அறிமுகவுரையைத் தொடர்ந்து 'திருமந்திரம்' என்னும் தலைப்பில் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ குமாரவேல் சொற் பொழிவாற்றவுள்ளார். (செ)

## இராசி பலன்

[ஆடி 3 வியாழன்]
திரயோதசி
காலை 6 06 வரை
சதுர்த்தசி பி இ 4.12 வரை
திருவாதிரை பி இ 2 09
ராகுகாலம் - 1.31 - 3 01
நல்ல நேரம் - 7.31 - 9.01

**மேடம்**
சகோதரர் உதவி, இனிய சம்பவம், முயற்சி வெற்றி, வாக்குப் பலிதம்.

**இடபம்**
தொழில் நன்மை, வீண் செலவு மாதர் நட்பு, முயற்சி தாமதம்.

**மிதுனம்**
ஜனவசியம், நண்பர்கள் உதவி, முயற்சி பலிதம், சயன சுகம்.

**கடகம்**
காரிய அலைச்சல், மனக் கிலேசம், போசன சுகம், சபசெலவு.

**சிங்கம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு குடும்ப சுகம், கீர்த்தி, தொழில்மந்தம்.

**கன்னி**
தொழில் வெற்றி, மேன்மை, முயற்சி ஜெயம், உற்சாகம்.

**துலாம்**
கட்டுப்பாடு, உடல் உழைப்பு, ஆன்றோர் ஆசி, காரிய தாமதம்.

**விருச்சிகம்**
வீண தொல்லை, நல்ல உணவு, அமைதிக் குறைவு, முயற்சி தடங்கல்.

**தனுசு**
சுவாரஸ்யம், நண்பர்கள் தொடர்பு, தனவரவு, திடீர் பயணம்.

**மகரம்**
பகைவரால் நன்மை, நினைத்த காரியம் கைகூடும், தொழில் விருத்தி, ஆரோக்கியம்.

**கும்பம்**
அரச நன்மை, குடும்பக் கவலை, வியாபாரச் சிறப்பு, முயற்சி தாமதம்.

**மீனம்**
அதிகாரம், ரோகம், மனக் கிலேசம், கல்விச் சிறப்பு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

-வளவன்-

## வலி. கிழக்கு பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு
### விரைவில் வழங்க நடவடிக்கை

(கோப்பாய்)

வலி- கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது 120 முன்பள்ளி ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு பிரதேச சபை ஊடாக வழங்கும் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப் படவுள்ளதாக கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ச. ச. நிலைய சிறுவர் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட வேளை, வலி கிழக்குப் பிரதேச சபை உப தலைவர் யு. எல். ஏ.ரவி தெரிவித்தார்.

நிலையத் தலைவர் மு. முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றுகையில், எமது பிரதேசத்திற்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு பால் மா, பிஸ்கட் போன்ற சத்துணவுகள் வழங்கும் நடவடிக்கைகள் தம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இவை இக் குழந்தைகளுக்கு உரிய முறையில சென்றடைய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார், (உ-79)

## தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் கறுப்புப்பட்டி போராட்டம்

(யாழ்ப்பாணம்)

பல்கலை மாணவன் திவ்வியன் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து, தொடர்ந்து நடத்தி வந்த பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நேற்றுமுதல் கைவிட்டு, பல்கலைக்கழகம் மூடப்பட்டிருப்பதைக் கண்டித்து இன்றுமுதல் கறுப்புப் பட்டி அணிந்து விரிவுரைகளுக்குச் சமுகமளிப்பதென முடிவு செய்திருப்பதாக தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் மன்றம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் விடுத்த அறிக்கையில்,

யாழ் பல்கலைக்கழகத்தை மூடியதற்கான உண்மைக் காரணத்தை உடனடியாக உரியவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எந்த வன்முறையிலோ பொதுச் சொத்துக்களைச் சேதமாக்கும் செயற்பாட்டிலோ ஈடுபடவில்லை.

அவ்வாறிருக்க யாழ் பல்கலைக்கழகத்தை மூடுமாறு அழுத்தம் எங்கிருந்து வந்தது?

யாழ் பல்கலைக்கழகத்தைத் திறக்குமாறு அழுத்தங்களைக் கொடுப்பதற்காக நாம் பல்கலைக்கழகம் திறக்கப்படும் வரை கறுப்புப்பட்டியை அணிந்து விரிவுரைகளுக்கு சமுகமளிக்கவுள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## குடிநீரினை சிக்கனமாக பாவிக்குமாறு மாநகர சபை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடிநீரை வீண் விரயம் செய்யாது சிக்கனமாகப்பயன்படுத்துமாறு யாழ். மாநகர சபை பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மாநகர சபையினால்ஜீ ரி. சற் நிறுவனத்தின் உதவியுடன் நாவாந்துறை, குருநகர், பாஷையூர், கொழும்புத்துறைப் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது.

திருநெல்வேலி கோண்டாவில் பகுதிகளிலிருந்தே மேற்படி நீர் விநியோகம் செய்யப்படுகின்றது. இதனால் மாநகர சபைக்கு பாரிய செலவினங்கள் ஏற்படுகின்றன.

வரட்சிக் காலத்தில் நீர் நிலைகள வற்றிப் போவதுடன் நன்னீர் உவர்த்தன்மை அடைகின்றது. இதனால் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உண்டு.

எனவே பொதுமக்கள் குடிநீரை ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்தாமல் குடிப்பதற்கு மட்டும் பயன்படுத்துமாறு யாழ். மாநகர சபை மேலும் கேட்டுள்ளது. (செ)

## நாரந்தனை சந்தை புனரமைக்க நிதி ஒதுக்கு

(ஊர்காவற்றுறை)

நாரந்தனை தெற்கு செருக்கன் சந்தியில் உள்ள பொதுச் சந்தை புனரமைக்கப்படவுள்ளது.

இவ்வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து 1இலட்சத்து 50ஆயிரம் ரூபா இச்சந்தையைப் புனரமைப்புச் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (உ-75)

## இன்று ஒரு தகவல்

## வேதவியாசரின் வருத்தம்

வியாசர் இறைவனின்திரு முன்னர்நின்றுகண்களில கண்ணீர் மல்க அழுதார். 'ஆண்டவனே! நான் அறியாமல் செய்த மூன்று பிழைகளையும் நீ தான் பொறுதது அருள வேண்டும்' என்று வேண்டினார். இதைக் கேட்டு அங்கு கூடியிருந்தவர்கள் வியப்பு அடைந்தனர். வேத வியாசர் அப்படி என்ன பிழைகளைச் செய்திருப்பார் என்று அவர்ளுக்குள் பேசிக் கொண்டனர். விடை ஒன்றும் கிடைக்கவில்லை. அவர்களில் ஒருவன் வியாசரைப்பார்த்து துறவியாரே! தாங்கள் செய்த பிழைகள் தான் என்ன? என்று பணிவாகக் கேட்டான்.

அதற்கு வியாசர், 'உருவம் இல்லாத கடவுளை உருவம் உள்ளவராக நினைத்து வழிபட்டது ஒருபிழை வாக்கிற்கு எட்டாத அந்த இறைவனை நாவினால் புகழ்ந்துபாடியது இரண்டாவது பிழை எங்குப நிறைந்த பரம் பொருளாகிய இறைவனைக் காண வேண்டி ஊர் ஊராகப் புனிதப்பயணம் மேற் கொண்டது மூன்றாவது பிழை. இந்த மூன்று பிழைகளையும்பொறுத்தருள வேண்டும் என்று இறைவனிடம் வேண்டினேன்' என்று விளக்கம் தந்தார் வியாசர்

பேராசிரியர் எ சோதி

## சட்ட விரோத சாராய உற்பத்தி

# அச்சுவேலிப் பகுதியில் அதிகரிப்பு

### பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

கடந்த காலங்களை விட தற்போது சட்டவிரோத சாராய உற்பத்தி மற்றும் விற்பனை அச்சுவேலிப் பகுதியில் வெகுவாக அதிகரித்து விட்டதாக அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

யாழ் பல்கலைக் கழக விஞ்ஞான பீட மாணவன் திவ்வியன் கைது, அதனால் யாழ்ப்பாண மாணவரின் கல்விச் செயற்பாட்டில் ஏற்பட்டபின்னடைவு தொடர்பாக அப்பகுதிப் பாடசாலை அதிபர்களுடன் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின் போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்ற அச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; பாடசாலை மாணவர்கள், மற்றும் பல்கலைக்கழக மாணவரின்கல்வி நிலை பாதிப்புறுவதனை அனுமதிக்க முடியாது.

க பொ. த [உயர்தரம்] பரீட்சை ஆண்டு 05 புலமைப் பரிசில் பரீட்சை, மற்றும் இரண்டாம் தவணைப் பரீட்சை ஆகியன அண்மிக்கின்ற இவ்வேளையில் மாணவர் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்பதுடன் பரீட்சைகளுக்கும் தோற்ற வேண்டும்.

இது விடயத்தில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரின் ஒருங்கிணைந்த செயற்பாடு மிக அவசியம். தகுந்த முறையில் மாணவர் வழி நடத்தப்பட வேண்டியது அவசியம்.

மாணவர் குழுக்களாக சேர்ந்து நடமாடுவதோ அல்லது வீதிகளில் தேவையற்ற நடவடிக்கையில் ஈடுபடுவதோ விரும்பத்தக்கதல்ல. இது விடயத்தில் பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படலாம்.

தற்போது அவசர காலச் சட்டம் காலாவதியாகி விட்டாலும் கூட பயங்கரவாதத் தடைச் சட்டம், மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம ஆகியன நடைமுறையில்உள்ளன. இவற்றின் கீழ் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் உண்டு.

ஆனால் சட்ட அமுலைவிட மனிதாபிமானத்தை கடைப்பிடிப்பதனையே நாம் பெரிதும் விரும்புகின்றோம். சகலரின் ஒத்துழைப்பும் இது விடயத்தில் அவசியமாகும்.

மாணவர் வீதி ஒழுங்கைப் பின்பற்ற வேண்டியது மிக அவசியம். இதன்மூலம்தேவையற்றவிபத்துக்களைத்தவிர்க்க முடியும்.

பாடசாலைகளில் திருட்டுக்கள் இடம் பெறுவது அதிகரித்து விட்டன. குட்டியப் புலம் அ த.க. பாடசாலையில் பல தடவைகள் திருட்டுக்கள் இடம்பெற்று விட்டன. அந்த ஊரில் வசிப்பவர்கள் அல்லது வேறு இடங்களிலிருந்து அப்பகுதியில் வந்து வசிப்பவர்களே இத்தகைய சம்பவங்களிற்கு காரணமாக உள்ளனர்.

இது சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது விடயத்தில் பொதுமக்கள் வழங்கும் தகவல்கள் மிகவும்பயன்உள்ளவையாக அமைகின்றன.

மேலும் கோப்பாய், புத்தூர், நீர்வேலிப் பகுதிகளிலும் திருட்டுச்சம்பவங்கள் இடம்பெறுகின்றன. சிறுவர்கள் இதற்கெனப் பயன்படுத்தப் படுகின்றனர்.

பெரும்பாலான திருட்டுக்கள் மற்றும் சட்ட விரோத சாராய உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் வேறுஎந்த விதமான தொழிலும் இல்லாததாலேயே தாம் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கின்றனர் என்று மேலும் அவர் குறிப்பிட்டார். [க]

## குடாநாடு முழுவதும் விரைவில் 24மணிநேர மின் விநியோகம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு இன்னமும் 2 மாத காலத்தில் 24 மணி நேர மின்சராம் வழங்கப்படும் என வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் ஈ.பி.டி பி தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில் ;

யாழ். குடாநாட்டு மக்கள் மின்சாரம் பெறுவதில் எதிர்நோக்கி வருகின்ற சிரமங்களை அறிவேன், இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு சேதமடைந்த ஜெனரேட்டர்கள் தற்போது திருத்தப்பட்டு வருகின்றன.

இதன் திருத்த வேலைகள் பூர்த்தியானதும் குடாநாட்டு மக்களுக்கு 24 மணிநேர மின் விநியோகம் மேற்கொள்ளப் படும் என உறுதியளித்திருந்தார். (உ-77)

### சர்வதேச செஞ்சிலுவைச் சங்க

## செயற்பாட்டை விளக்கும் கலந்துரையாடல் சனியன்று

[யாழ்ப்பாணம்]

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் குறித்தும் அதன் நடவடிக்கைகள் குறித்தும் பத்திரிகை ஆசிரியர்கள, மற்றும் செய்தியாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றை யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்கக் கிளை நடத்தவுள்ளது.

மேற்படி நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணி தொடக்கம் 12.00மணி வரை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சென்றிடுனாட் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என செஞ்சிலுவைச்சங்க அதிகாரி அன்ரன் செல்வராஜா தெரிவித்தார். (உ-9)

## பாராளுமன்றம் ஒத்திவைப்பு மலையகத் தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு

[கொழும்பு]

நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஒத்திவைத்ததைக் கண்டித்து தாம் எதிர்பபு நடவடிக்கைகளில் இறங்கப்போவதாக மலையக தோட்டத் தொழிற் சங்கங்கள் கூட்டாக அறிவித்துள்ளன.

அரசுக்குஎதிரான போராட்டங்களில் எதிர்க்கட்சிகள் ஈடுபடும்போது தோட்டத் தொழிலாளர்கள் ஒருநாள வேலை நிறுத்தத்தில் குதிப்பார்கள் என மலையக தொழிற் சங்கங்கள் தெரிவித்தன.

மலையக மக்கள் முன்னணி தேசிய தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி, தொழிலாளர் சங்கம், ஆகிய தொழிற் சங்கங்கள் சேர்ந்து நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இத்தகவல்கள் தெரிவிக்கப் பட்டன. [8]

## கோதுமை மாவுக்கான தட்டுப்பாடு நீங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் கோதுமை மாவினை முன்பு போல் கொள்வனவு செய்யும் வாய்ப்புஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுளள கூட்டுறவுச் சங்கங்கள பலவும் உணவுத்திணைக்களத்திற்கு பெருந்தொகையான கடன்களைச் செலுத்த வேண்டியுளளதால் 1989 ஆம் ஆண்டுக்கு முந்திய இந்நிலுவைகளை தவணை முறையில் செலுத்த வேண்டும எனவும்,

அவ்வாறு செலுத்த தவறும் பட்சதத்தில் கூட்டுறவு சங்கங்களுக்குரிய கோதுமைமா விநியோகத்தை நிறுத்தும்படியும் உணவு ஆணையாளர் திணைக்களம், யாழ் அரசாங்க அதிபருக்கு பணிப்புரை விடுத்திருந்தது.

இதனால் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான கோதுமைமா விநியோகம் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி இருந்தது.

இதுவிடயம் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலுளள கூட்டுறவுச் சங்கங்களும், அரசாங்க அதிபரும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து அமைச்சர் கூட்டுறவு திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சரான றெஜி ரணதுங்காவுடனும் மற்றும உயரதிகாரிகளுடனும் உடனடியாக தொடர்பு கொண்டதையடுத்துஇப்பிரச்சினைக் குரிய தீர்வுகாணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

### பிரசாரக்குழு

## நியமிப்பு

(கொழும்பு)

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஓகஸ்ட் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை ஆதரித்துப் பிரசாரம் செய்யவென அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுளளது

ஜனாதிபதி தலைமையில், பிரதமர் மற்றும் அமைச்சர்கள் ரொனி டீமெல், எஸ் பீ திசாநாயக்க, இந்திகா குணவர்த்தன, லக்ஸ்மன் கதிர்காமர், பட்டி வீரக்கோன், ஜீ எல் பீரிஸ், பேரியல் அஷ்ரப், டக்ளஸ்தேவானந்தா ஆகியோர் அதில் அங்கம் வகிப்பார்எனத் தெரியவந்துள்ளது

இக்குழுவின் அழைப்பாளராக அமைச்சர் டீ. எம், ஜயரத்ன இருப்பார். (உ)

## தடுப்பூசி ஏற்றல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கால்நடை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் அப்பிரதேசத்திலுள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுதல், நலமடித்தல என்பன தற்சமயம் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக கால்நடை அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ குமாரசாமி தெரிவித்தார். (உ-82)

## அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

அல்லைப் பிட்டியில் அண்மையில் ஈ. பி. டி. பி அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத் திறப்பு விழாவில், அல்லைப்பிட்டி ஈ. பி. டி. பி. அலுவலகப் பொறுப்பாளர் ஏபிரகாம், ஈ. பி. டி. பி. தீவக உதவிப் பொறுப்பாளர் காந்தன் ஈ. பி டி. பி. முக்கியஸ்தர் நெப்போலியன் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ)

### கசிப்பு உற்பத்தி

## மும்முரம்

(கோடபாய்)

கோப்பாய்ப் பகுதியில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் இடை நிறுத்தப் பட்டாலும் தற்போது கோப்பாய் வடக்குகுப்பிளாவத்தை பகுதியில் கசிப்புவிற்பனை மும்முரமாக இடம்பெறுவதாகத் தெரிய வருகின்றது.

வேறு பகுதியிலுள்ளோர் இப் பகுதியிலுள்ள முகவர்கள் ஊடாகக் கசிப்பைப் பெற்றுவருவதாக அறிய முடிகின்றது. (உ-79)

## மருதனார்மடம் சந்தையில் மலசலகூட வசதியில்லை

மருதனார்மடம் சந்தையில் மலசலகூட வசதி சீரின்றி இருப்பதாகத் தெரியவருகிறது.

அதிக மக்கள் கூடும் மேற்படி சந்தையில் மலசலகூட வசதி சீரின்றி இருப்பதனால், இயற்கைக் கடன்களை சிலர் அருகிலுள்ள பற்றைகள் மற்றும் மதிற்கரையோரங்களில் கழிப்பதால் அப்பகுதியில் மிகுந்த சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகவும தெரியவருகிறது. (உ-129)

### றுகுணு பல்கலை மாணவர்

## கறுப்புப்பட்டி அணிந்து விரிவுரைகளில் பங்கேற்பு

(கொழும்பு)

மூன்று மாணவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு விரிவுரைகளில பங்குபறற முடியாமல் இடைநிறுத்தப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக கடந்த 16 ஆம் திகதி முதல் ஒரு வாரகால எதிர்ப்பு நடவடிக்கை றுகுணு பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

வளாகச்சூழகல் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. மாணவர்கள் கைகளில் கறுப்புப்பட்டி அணிந்து விரிவுரைகளில் பங்குபற்றுகிறார்கள். இந்த வாரத்தில் ஒரு நாள் அடையாள பகிஷ்கரிப்பு நடத்த திட்டமிட்டிருப்பதாக மாணவர் மன்றததலைவர் ரவீந்திர முதலிகே தெரிவித்தார்.

மார்ச் 28 ஆம் திகதி இரு மாணவர் குழுக்களுக்கிடையே எற்பட்ட மோதல் தொடர்பாகவே மூன்று மாணவர்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### அதிகரித்த வெப்பத்தால்

## கோழிகளுக்கு அம்மை நோய் ஏற்படும் அபாயம்

[புலோலி]

வெப்பம் அதிகரித்து வருவதனால் கோழிகளுக்கு கோழி அம்மை நோய் ஏற்படக்கூடிய அபாயம் ஏறபட்டுள்ளது. எனவே கோழிவளர்ப்போர், கோழிகளுக்குகோழி அம்மைத் தடுப்பு நோய் ஊசிகளைப் போட்டுக்கொள்ளுமாறு பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

இம்மாதம் 25ம் திகதி பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் மேற்படி தடுப்பூசிகள் கோழிகளுக்கு போடப்படும் என்றும் கோழிகளுக்கு ஊசிகளைப்போட்டுக்கொள்ள விரும்புவோர் 24 ம் திகதிக்கு முன்னர்பதிவுசெய்துகொள்ள வேண்டுமென்றும், கரவெட்டியில் இயங்கும் பருத்தித்துறை கால்நடைவைத்திய உபபணிமனையிலும் இதற்கான பதிவுகளைச் செய்யலாமென்றும் அவர் தெரிவித்துள்ளார். [உ-52]

## விற். சி. நிறைந்த உடை விரைவில் விற்பனைக்கு

(ஜப்பான்)

ஜப்பான் ஆடை தயாரிப்பு நிறுவனம் புதுவகை ஆடை ஒன்றை உற்பத்தி செய்துள்ளது.

உணவு மூலம் விற்றமின் 'சி' கிடைக்கப்பெறாதவர்கள் இந்தச் சேட்டை அணிவதன் மூலம் அந்தச் சத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒருவகை இரசாயனப் பொருளை சேட்டில் பூசுவதன் மூலம் விற்றமின் 'சி' ஆக மாற்றமடைகிறது. இந்த சேட்டை 30 தடவைகள் கழுவிய பின்னரும் விற்றமின் 'சி' மாற்றமடையாது.

இந்த ஆடை அடுத்த ஆண்டு விற்பனைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-05)

# ஆக்ரா மாநாடு ஆக்கபூர்வமாய் அமைந்ததென இருதரப்பும் தெரிவிப்பு

(புதுடில்லி)

ஆக்ரா உச்சிமகாநாடு தோல்வியடையவில்லையென்று இருநாடுகளும் தெரிவித்துள்ளன.

இந்திய வெளியுறவு அமைச்சர் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் ஆக்ரா உச்சிமாநாடு தீர்க்கமான முடிவு எதையும் எட்டாத போதும் பேச்சு வார்த்தைக்குரிய அடித்தளம் அமைக்கப்பட்டு விட்டதாகத் தெரிவித்தார்.

மேலும் செய்தியாளர்களுக்குத் தெரிவிக்கையில், ஆக்ரா மாநாடு சமாதானம், அமைதி, நல்லெண்ணம் என்பன உருவாகுவதற்கு வழி அமைத்திருக்கிறதென்று தெரிவித்தார்.

இதேவேளை ஆக்ராமாநாடு தோல்வி அடையவில்லையென்றும் இன்னும் பேச்சு வார்த்தைகள் தொடர்வதற்கு அடித்தளம் அமைத்திருக்கிறது என்றும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அப்துல் சத்தார் தெரிவித்தார். இடையில் பேச்சுக்கள் நின்று போனது துரதிர்ஷ்டவசமானது என்றும் விரைவில் பேச்சுக்கள் தொடரும் என்றும் தெரிவித்தார். (து)

## இந்தோ. அதிபர் மீதான விசாரணை அடுத்தமாதம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய அதிபர் மீதான குற்றவியல் விசாரணைகள் அடுத்தமாதம் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் ஆலோசனைச் சபையில் விசாரணைகள் நடைபெறுகையில் வன்முறைகள் வெடித்தால் மக்களவை உறுப்பினர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்த பொலிஸார் ஆயத்தமாக இருப்பதாகப் பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி அப்துல் ரகுமான்வாஹித் இருபது மாதங்களாகச் செய்த குற்றங்களை விசாரிக்கவே மக்கள் ஆலோசனைச் சபை கூடுகிறது.

இதேவேளை, தன்மீது குற்றம் சுமத்தப் பட்டால் நாட்டில் அவசர காலநிலை பிரகடனப் படுத்தப் போவதாக வாஹித் அறிவித்துள்ளார். (து)

## உலக தரிசனம்

## 4 வது தமிழ் இணைய சர்வதேச மகாநாடு இம்முறை மலேசியாவில்

(கோலாலம்பூர்)

நான்காவது தமிழ்இணைய சர்வதேசமகாநாடு மலேசியாவில் நடைபெறவுள்ளது.

ஆகஸ்ட்மாதம் 26ஆம்திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இம் மகாநாட்டில், தமிழ் இணைய சேவைகளின் அபிவிருத்தியைப் பிரதிபலிக்கும் கண்காட்சி இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

'முன்னேற்றத்திற்கான பாதை' என்ற தலைப்பில் மேற்படி மகாநாடு நடைபெறவுள்ளதாக கண்காட்சியின் ஒருங்கமைப்பாளர் தெரிவித்துள்ளார். (செ)

## இஸ்ரேல் பகுதிகளில் பாதுகாப்பு தீவிரம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் சனசந்தடி நிறைந்த பொது இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பலஸ்தீனரின் தற்கொலைக் குண்டுத்தாக்குதலைத் தொடர்ந்து நேற்று முன்தினம் முதல் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நடவடிக்கையை தொடர்ந்து அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவலை சந்திக்கும் வகையில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவிருந்த இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் பாதுகாப்புக் கருதி தனது பயணத்தினை இடைநிறுத்தி உள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலில் ரெஅவிவ் பகுதியிலமறைத்து வைக்கப்பட்டிருந்த பார்சல் குண்டொன்றினை இஸ்ரேல் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். (உ-7)

## வாஜ்பாய்-முஷாரப் பேச்சுக்கள் மீண்டும் தொடர வாய்ப்புண்டு

திறந்த மனத்துடன் பேச்சுக்கு வந்திருக்கிறேன் என்று பாகிஸ்தான அதிபர் புதுடில்லி விமான நிலையத்தில் வந்திறங்கியவுடன் செய்தி வெளியிட்டார் உண்மையில் அவர் இதய சுத்தியுடன் வந்தார்.

வரும்படி அழைப்பு விடுத்த இந்தியப் பிரதமரும் இதய சுத்தியுடன் எல்லாப் பகைமைகளையும், துன்பங்களையும் ஒதுக்கி விட்டு இந்தியாவிற்கு வரும்படி முஷாரப்பிற்கு அழைப்பு விடுத்தார்.

அழைப்பு விடுக்கப்பட்ட பொழுது, இந்தியத் தரப்பில் சிலர் குறிப்பாக அரசியல் வாதிகள் பொடி வைத்துப் பேசினார்கள், அது அவ்வளவாக எடுபடவில்லை.

அதிபர் முஷாரப் விமான நிலையத்தில் வந்து இறங்கும் போது அளிக்கப்பட்ட வரவேற்பில் இந்திய விமானப் படைத் தளபதி கைலாகு கொடுத்து வரவேற்றார்.

தனது நாட்டிற்கு பிரவேசிப்பது போன்ற உணர்வுடன் மெய்ப் பாதுகாப்பைக் கூட பேணாது முஷாரப் சர்வ சாதாரணமாக ஒவ்வொரு நிகழ்விலும், காரியங்களிலும் தொழிற்பட்டார்.

ஆக்ராவில் வாஜ்பாய்க்கும் முஷாரப்பிற்கும் இடையில் பேச்சுக்கள் தொடங்கின.

பல நாட்டுப் பத்திரிகைகள் அப் பேச்சுவார்த்தையினை வரவேற்று உற்சாகமளிக்கும் வகையில் எழுதின. பல நாட்டுத் தலைவர்கள் இரு தலைவர்களது பேச்சு வார்த்தைகள் வெற்றி பெற வேண்டும் என்று கருத்துக்கள் தெரிவித்தனர்.

ரஷ்யா போன்ற நாடுகள்வரவேற்றன. அமெரிக்கா மௌனமாக அவதானித்தது. இந்திய அரசியல் கட்சிகள் சிலகா நாட்டுக்கு முட்டுக் கட்டைகள் போடும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டனர்.

முக்கியமாக தேசிய ஜனநாயக ஐக்கிய முன்னணிக் கட்சிகளிடயே மகாநாடு பற்றி மாறுபட்ட கருத்துக்கள் நிலவிய போதும் வெளிக்கொணரவில்லை.

ஜோர்ச் பெர்னாண்டஸ் அத்வானி போன்றோர் சில, மாறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

முதல் கட்டப் பேச்சு சுமுகமாக நடந்தது என்று அறிவிக்கப்பட்டது. எதிர்ப்பாளர்களிடையே இருந்த முகமாற்றத்தை செயல்மாற்றத்தை, அறிக்கைமாற்றத்தைஎப்படிச் சொல்வது?

ஒவ்வொருநாடும். அரசியல் வாதியும், பத்திரிகையாளனும் சுயநலக் கருத்துக்களை வெளியிட்டார்களேயன்றி 53 வருடப் பிரச்சினை தீரவேண்டும் என்று கருதினார்களோ என்றால் சந்தேகம்தான்.

பேச்சு இடை நிறுத்தப் பட்டு முஷாரப் பாகிஸ்தான் சென்று விட்டார் என்ற செய்தி கேட்டதும் பத்திரிகைகள் பேச்சு முறிந்துவிட்டது மீண்டும் காஷ்மீரில் யுத்தம் என்றெல்லாம் பெரிதுபடுத்தின.

நடந்தது என்ன? ஆக்ரா பேச்சுக்கள் முறியவில்லை; அது அமெரிக்காவில் தொடரும் என்று இருநாடுகளும் கூறுகின்றன.

## கலைஞரின் கூற்றுக்கு ஜெயலலிதா மறுப்பு

(சென்னை)

சிறையில் மு. கருணாநிதியைக் கொலை செய்ய சதி செய்யப்பட்டதாக அவரால் சொல்லப்பட்ட செய்தி அப்பட்டமான பொய் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மத்தியில் அவர் கருத்து தெரிவிக்கையில்; கருணாநிதியின் கைது நியாயமானது என்றும் மக்களைத்திசை திருப்பும்வகையில் கொலைசசதுபற்றியும் காவல் துறையினர் மீதுபுரளியையும் அவர் கிளப்பி விட்டிருக்கிறார் என்றும் ஜெயலலிதா மேலும் குறிப்பிட்டுள்ளார்:

கருணாநிதியின் எந்தக் கூற்றுக்கும் தான் மசியப்போவதில்லை யென்றும்காவல் துறை அதிகாரிகளை எந்த வித காரணங்கொண்டும் வருத்தப் போவதில்லை என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (து)

## தமிழக ஆளுநராக பிரபாக்குமாரை நியமிக்க முதல்வர் பரிந்துரை

(சென்னை)

அடுத்த தமிழக ஆளுநராக முன்னாள் அமைச்சரவைச் செயலர் பிரபாக்குமாரை நியமிக்க வேண்டுமென்று முதல்வர் ஜெபலலிதா பரிந்துரை செய்துள்ளார்.

தமிழக ஆளுநராக ஆந்திர மாநில ஆளுநர் பி. ரங்கராஜன தற்போது இருந்து வருவது குறிப்பிடத்தக்கது (து)

## அங்கோலாவில் தீவிரவாதிகள் தாக்குதல் 70 பொதுமக்கள் பலி

(லுவாண்டா)

அங்கோலாவில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 70 பொதுமக்கள் பலியானதுடன் 15 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அங்கோலாவின் வைரச் சுரங்க நகரமான சிங்குப்பகுதியிலே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அங்கோலாவின் இடிற்றாகிசட் என்ற தீவிரவாத அமைப்பினைச் சேர்ந்த 100 பேர் கொண்ட குழு ஒன்று இத் தாக்குதலை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ அதிகம் சாப்பிடுவது எபபோது?

எதை எதைப் பற்றி எல்லாம் ஆராய்ச்சி செய்பவர்கள் மத்தியில் மக்கள் எந்தெந்த நேரததில் எப்படியெல்லாம் சாப்பிடுகிறார்கள் என ஆராய்ச்சி செய்து அறிக்கை வெளியிட்டுள்ளார் ஜார்ஜியா மாநிலத்தில உள்ள மருத்துவப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜாண்டி கேஸ்ட்ரோ

அவரது ஆராய்வின்படி தனியாக இருக்கும் போது குறைவாகவு ஒருநபருடன் இருக்கும்போது அதிகமாகவும் உண்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

தனியாக சாப்பிடும போது உட்கொள்ளும் உணவைப்போல 48 சதவிகிதமும் கூட்டத்தில் இருந்து சாப்பிடும்போது 76 சதவிகிதமும் அதிகமாக உண்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ★ மருத்துவத்தில் வெள்ளி ஆணிகள்

உடைந்த எலும்புகளை இணைப்பதற்கு வெள்ளி ஆணிகள் தான் பயன்படுத்தப்படுகின்றன என்றால் நம்புவீர்களா?

ஆம்! துருப்பிடிக்காததும், எடைமாறாததும், ஆபத்தைத் தராததும் ஆன வெள்ளி ஆணிகள் எலும்பு உடைவுகளை இணைக்கப் பயன்படுகின்றதாம அததுடன் மண்டை ஓட்டில் ஏற்படும் ஓட்டைகளை அடைக்க வெள்ளித தகடுகள மருத்துவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பது விந்தை தானே!

— அவதானி —

## பயணிகள் பஸ் விபத்து பதின்மூன்று பேர் பலி

(தெஹரான்,

ஈரானில் பயணிகள் பஸ் வண்டி ஒன்றும் ட்றக் வாகனம் ஒன்றும் மோதியதில் 13 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 26 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை, ஈரானில் ஒரு வருடம் ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கின்றனர் என புள்ளிவிபரங்கள் தெரிவித்ததையடுத்து,

இவ் வருட இறுதியில் வீதி விபத்துக்களைக் குறைக்க புதிய பொலிஸ் படையினரை ஈரான் தயார்படுத்தி வருகிறது. (உ-7)

பனத்தானாம் பார்த்தார்க்(கு)
உணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படுஞ்சொல்.
குறள்

# வலம்புரி

## மீண்டும் திறக்கவாரீர்!

யாழ் பல்கலைக் கழக மாணவர்களின் பலத்த போராட்டத்தின்பயனாக மாணவன் திவ்வியன் நேற்று முன்தினம் யாழ்ப்பாண நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார் மாணவன் திவ்வியன் யாழ் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டமை ஓரளவு ஆறுதலைத் தருகிறது.

அதே வேளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மூடப்பட்ட நிலையில் இருப்பது மிகவும் மன வருத்தத்தைத் தருகிறது. யுத்த சூழ் நிலையிலும் தம் பிள்ளைகளின் கல்விச் செல்வம் பாதிக்கக் கூடாதென எண்ணுகின்ற தமிழ்ப் பெற்றோர்கள் வியர்வை சிந்தி தம் பிள்ளைகளின் கல்விக்காகப் பாடுபடுகின்றனர்.

இந் நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மூடியிருப்பதால் பெற்றோர்களின் மனச் சுமை அதிகரிக்கவே செய்யும்.

உலகிலுள்ள பல்கலைக் கழகங்களிலெல்லாம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் வித்தியாசமானது- இறைமையுடையது. இங்கு ஓரே இனம், ஓரேமொழி, ஓரே தாயகம் என்ற சகோதரத்துவத்தால் பிரதிநிதித்துவப்படும் மாணவர்களே கல்விகற்கிறார்கள். துணைவேந்தர் முதல் விரிவுரையாளர்கள் வரை, பதிவாளர் முதல் சாதாரண சிற்றூழியர்கள்வரை தமிழ்த்தாயின் மைந்தர்கள் தமிழினம் சுதந்திரமாக வாழவேண்டுமென்ற உணர்வுடையவர்கள். இந் நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் இரத்த உறவுடையவர்கள். 'தானாடா விட்டாலும் தசையாடும்' உணர்வுடையவர்கள்.

இந் நிலையில் பேரினவாதத்தின் முடிவுகளை எமக்குள் நாம் பங்கிட்டுக் கொண்டு பொருத்தமற்ற முறையில் குற்றங்களை சுமத்த முனைவது பல்கலைக் கழகமென்ற அறிவுப் பீடத்திற்கு அழகல்ல.

தமிழ் மக்களின் மிகப் பெரும்தேசியச்சொத்தான யாழ் பல்கலைக் கழகம் மீண்டும் திறக்கப்பட வேண்டும், இதற்காகநாம் அனைவரும் ஒருமித்து குரல் கொடுக்கவேண்டும்.

எனவே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணை வேந்தரின் தலைமையில் பல்கலைக் கழக மாணவர்கள், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் ஒன்று திரண்டு எமது பல்கலைக் கழகத்தை மீண்டும் திறக்க முன்வருவோமாக.

# யாழ் நூலை யாத்த வித்தகர் விபுலானந்தர்

# பேராசிரியரும், பெருந்துறவியுமாவார்

(சுவாமி விபுலானந்தரின் 109வது நினைவு தினத்தை ஒட்டிய கட்டுரை இங்கு பிரசுரமாகிறது)

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலே மட்டக்களப்பு மாவட்டத்திலேயுள்ள காரைதீவிலே மக்கட் பண்புடைய வேளாளர் குலதிலகராகிய சாமித்தம்பியும் அவரது மனைவியார் கண்ணம்மையாருஞ் செய்த தவப்பயனால் அவதாரஞ் செய்தவர் சுவாமி விபுலானந்த அடிகளாவர். இளமையில் தந்தையார் சூட்டிய பெயர் தம்பிப்பிள்ளை கதிர்காமம் சென்றபொழுது பெயரை மாற்றி மயில்வாகனம் என்று அழைத்தனர். நல்லரத்தினம்என்னும் ஆசிரியரால் ஏடு தொடக்கப்பட்டு ஆரம்பக்கல்வியை காரைதீவிலேயே பூர்த்திசெய்தனர். வடமொழியையும் தமிழையும் வைத்தியலிங்க தேசிகரிடம் கற்றுக் கொண்ட அடிகளார் ஆங்கிலத்தை கல்முனை மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும், உயர் கல்வியை மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியிலும் படித்து 1908ல் 'கேம்பிறிஜ் சீனியர் பரீட்சையிலும்'முதன்மையாகச் சித்தியெய்தி அங்கேயே ஆசிரியருமானார்.

தாயாரை இளமையிலேயே பறிகொடுத்த மயில்வாகனன் தந்தையாரது அரவணைப்பில் வாழ்ந்து மேலே படிக்க உத்தேசித்து கொழும்பையடைந்தார்.

### கொழும்பில்

1911-12 காலப் பகுதியில் ஆங்கிலப்பயிற்சியில் கலந்து கொண்டிருந்த காலத்திலே சித்தாந்த சாத்திரங்களைக் கற்றார். 1916ல் மதுரைப் பண்டிதர் தேர்விலும் முதன்மையாகச் சித்தியெய்தினார்.

1915ல் பௌதிகவியலிலுந் தேறிய மயில்வாகனனார் 1917ல் கொழும்பு அரசினர் கல்லூரியில் இரசாயன இயல் உதவியாசிரியரானார்.

கொழும்பிலிருக்கும் போதே, ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர் பற்றியும், பேர். பொன். இராமநாதனைப் பற்றியும் கேட்டறிந்தமயில்வாகனனார் 1917லயாழ்ப்பாணத்தில ஆசிரியத்தொழிலைக் கையேற்று வந்தார்.

### யாழ்ப்பாணத்தில்

புனித சபபத்திரிசியார் கல்லூரியில 1917 ஆம் ஆண்டு விஞ்ஞானத்து றையாசிரியராகக் கடமையேற்று1920 வரை கடமை புரிந்தார் இங்கே கடமையாற்றும் போதே லண்டன் விஞ்ஞான மாணி (BSC) பரீட்சையிலுஞ்சித்தியடைந்தார். இக் கலகட்டத்திலேயே யோகர் சுவாமிகளையுஞ் சென்று தரிசித்து அவரது ஆசீர்வாதமும் பெற்றுக் கொண்டார். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முகாமையாளர் திருவிளங்கம் பண்டிதர் மயில்வாகனத்தின் ஆற்றல்களைக் கண்டுஅவரை தமது கல்லூரியின் அதிபராக்கினார். 1920-1922 அப்பணியைத் திறம்பட ஆற்றிய மயில்வாகனனார், அக்கல்லூரிக்காக அரும்பாடுபட்டார். அக்காலத்திலேயே யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தை அப்போதைய வித்தியாதரிசி, தி சதாசிவ ஐயரது உதவியோடு அரசாங்க உத்தரவு பெற்ற சங்கமாக நிறுவி இயங்க வைத்தார்.

### இராமகிருஷ்ண மடத்திற் சேவை

1922 இல் அதிபர் வேலையைக் கைவிட்டு சென்னை இராமகிருஷ்ண மடத்திற் சேர்ந்து தொண்டு புரியுங் காலத்தில் பிரபோதசைதன்யர் என்னும் பட்டம் பெற்றார்.

1924 ல் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி சிவானந்தரால், விபுலானந்தர் எனும் பட்டத்தோடு காவியும பெற்றார்.

மீண்டும் இலங்கை வந்து மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்துக்கும், திருமலை இந்துககல்லூரிக்கும் அத்திவாரமிட்டார். யாழ்ப்பாணத்தில கல்விமான்களையும் சமய அபிமானிகளையுங் கண்ட விபுலானந்தர், மக்களின் கல்வியறிவின் மேம்பாடுகளையும் ஒழுக்க சீலங்களையுங்கண்டு வியந்தார் ஆலயங்களில் நடைபெறுமாற்றையுங் கண்டு வியந்து அவற்றையெல்லாம் ஒருபாடலில்படம்பிடித்துக் காட்டுகிறார்.

தொல்லியல் வழுவாச்
சைவநூற் புலவர்
தூநெறித் தமிழுரை
யாளர்
நல்லியற் புலவர்இசைதரும்
புலவர்
நாடகநவிற்றிடும் புலவர்
சொல்லியல் தொகைநூல்
வசனநூல் தருக்கம்
தோமறு கணிதநூல்
முதலாம்
பல்கலைப் புலவர்க் குறை
விடமாகப்
பரந்திசையெய்தும்
யாழ்ப்பாணம்

### பல்கலைக்கழகம்

மேலும், நாவலர் பெருமானுக்கு திருவாவடுதுறை ஆதீனத்துச் சந்நிதானம் மகாவித்துவானாக இருந்த மீனாட்சிசுந்தம்பிள்ளை மூலம் வழங்கிய 'நாவலர்' என்னும் 'பட்டத்தை அவர் பெற்றமையையும் போற்றி தமது மனோபாவ நிலையிற் கண்டு பாடிய பாடலும் அற்புதமானது. யாழ்ப்பாணத்தோடு தாமுமியைந் தவராகிய அடிகளார்களை மீண்டும் உயிர்ப்பிக்க வழி தேடினார்.

### யாழ் நூல் யாத்தல்

யாழ் நூல் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் அவர் மனத்தில் பூரணமாகநிலைகொண்டிருந்தது; யாழ் நூலைப் போல உலகப் புகழ் பெற்றவராகிய ஷேக்ஸ்பியரால் இயற்றப் பெற்ற நாடக நூலொன்றையுந் தமிழில் பெயர்த்து 'மதங்கசூளாமணி' என்னும் பெயரில் வெளியிட்டார்.

பல மரபு நூல்களையுங் கட்டுரைகளையும் வெளியிட்ட அடிகளார் தமது உயிரான யாழ் நூலை பெரும் விமரிசையாகவெளியிட்டார்.

1947 ஆம் ஆண்டிலே ஆனி6ம், 7ம் திகதிகளில்தமிழ் நாட்டிலே திருக்கொள்ளம்பு தூரிலுள்ள திருக்கோயிலிலே அக்காலம் தமிழ் நாட்டுக் கல்வி மந்திரியாயிருந்த அவிநாசிலிங்கச் செட்டியார் தலைமையில் அந்நூல் முறையாக அரங்கேற்றஞ் செய்யப் பட்டது. அதனால் அடிகளாரை தமிழ் நாடே வா வா

வை. க. சிற்றம்பலம்
முதுபெரும் புலவர்

பேரறிஞர்கள வாழ் யாழ்ப்பாணத்துக்கு ஒரு பெரும் பல்கலைக்கழகம வேண்டுமமன்று முதன் முதல்குரலகொடுத்தவா எனபதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

1931 ல் அண்ணாமலையில் ஒரு பல்கலைககழகம்வேண்டுமென்று சென்ற தூதுக் குழுவின் தலைவராகச சென்று கலந்துரையாடி அதில்வெற்றி கண்டு, அது கட்டிய ஆரமபத்திலேயே அதில முதன முதலாகதமிழ்த்துறையின் பேராசிரியராயிருநது பலபெரியார்கள படித்துயரக்காலாயிருந்தவர்.

### சைவமும் தமிழும்

1934ல சென்னையில்கூடிய சைவசித்தாந்த சமாசத்தின் தலைவராய்க் கருமமாற்றினார். அஃதன்றி, சென்னைத்தமிழ்ச் சங்க சொல்லாக்க மகாநாட்டிலும் தலைமை வகித்தார். அக்காலததிலேயே, மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளின் மேம்பாட்டினைத் தரங்கண்டு, ஒரு குழுவை நியமித்து, அக்குழுவிலே. இசை வல்லாரைக் கொண்டு பாடுவித்தது மன்றிஅச்சிலுமேற்றி விட்டார். இது நாடறிந்த உண்மை. சைவசித்தாந்தத்தில வளர்ந்து-

வேதாத்தந்தில்மூழ்கிய அடிகளார், 1937 ல திருக்கைலாய யாத்திரையை மேற்கொண்டார். மீண்டும் வந்த அடிகளார்கொக்குவில இராமகிருஷ்ண வித்தியாலயததை உண்டாக்கி, அரசின் நன்கொடைபெற்றுயர வழிவகுத்தார். 1939ல் இமாலயத்தில் நடைபெற்று வநத ஆங்கில மாதவிதழாகிய பிரபுத்தபாரத' பத்திரிகையின ஆசிரியராகிஇருவருடங்கள் திறம்பட நடத்தனார். 1941 ல இலங்கைக்கு மீண்ட அடிகளார் பேராதனைப பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை பேராசிராகி, பல உயாந்த உத்தயர்களை ஆளாக்கித் தந்தார். இந்த அருமையான மனிதப் பறவையை எடுத்த யாம,எயது இனத்துக்கு நாட்டுச்கு ஏதேனுமொருபெரியதொண்டினால அடையாளம்ஒன்றை ஆககிவைக்க வேண்டுமமன்று நினைத்தார்.

சிலபபதி காரத்திலே அரங்கேற்று காதையிற் சொல்லப் பட்ட யாழ், வகைகளுள் சில மறைந்து போனதையிட்டு வருந்தி அந்த யாழ், வகை

என்று அழைத்துஉபசரித்தது; அச்சிறப்புடன் இலங்கையில் கொழும்பை வந்தடைந்த அடிகளாரை, மாநகர சபையும் கொழும்புத் தமிழ்ச்சங்கமும் அழைத்துப் பாராட்டி உபசரித்தன. தம்மிடம் படித்த மாணவரான வெள்ளை வாரணனார், அருணா சலமெனுங் குன்றக் குடியடிகளாருவிட்ட ஏழு மாணவப் பட்டதாரிகளுடன் யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

### பாராட்டு விழா

யாழ்ப்பாண வைத்தீஸ்வர வித்தியாலயம்விழாக்கோலம் பூண்டது. கல்லூரிஅதிபரான ச. அம்பிகைபாகனின், அயராத உழைப்பினால் அடிகளார் மங்கள வாத்திய சகிதம் அழைக்கப்பட்டுப்பாராட்டப் பட்டார்.

பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் சு. நடேசபிள்ளை அவர்களது தலைமையில்நடந்த அந்த உபசார விழாவில் வெள்ளை வாரணனார், அருணாசலம் உட்படப் பலர் வியந்து பாராட்டினார்கள். அடிகளாரது புதுமையாக அமைப்பித்த பழையயாழை நினைவூட்டும். பேரி யாழ், இசைத்துக்காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து பகலுமிரவும் உறக்கமின்றிப் பாடு பட்ட அடிகளாரது யாழ். நூல் அரங்கேற்றிய பெரும் புகழும் ஒருபக்கமாக மகிழ்ச்சியைக்கொடுத்தஅதே நேரத்தில், நோய்வாய்ப்பட்டிருந்தார்.

கொழும்பில் 1947 யூலை 19ஆம் நாள் அடிகளார் சமாதியடைந்தார். மட்டக் களப்பில் சிவானந்தவித்தியாலயத்தின் முன்பாக அவரது சமாதி வைக்கப்பட்டது. வாழ்க அவர் புகழ், வளர்க அவரது அன்புக்கொள்கை ☐

## சாயி அருளமுதம்



அற்ப விஷயங்களுக்காகவும், நிலையற்றதாகிய புகழை அளிக்கும் கௌரவங்களுக்காகவுமே அவாவுற்றிருப்பதைக் காண்பீர்கள். உங்களைத் தூய்மைப்படுத்திநிறைவை எய்துவதற்கு நீங்கள கடவுளை நோக்கிக் கதற வேண்டும் உங்கள் உளளத்தில் குடியிருந்து கொண்டு அதை நச்சுப்படுத்திக் கொண்டிருக்கும் காமம, குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சரியம் என்ற ஆறு நாகபாம்புகளுக்காகவும் நீங்கள் அழுது புலம்பவேண்டும். பாம்பாட்டி தனது குழலினால் நாகங்களைச் சாந்தப்படுத்துவது போலநீங்களும் அவற்றைச் சாந்தப் படுத்த வேண்டும். இந்த நாகங்களை அடக்கக்கூடிய சங்கீதம் யாதெனில் இறைவன் நாமத்தை உரத்துப் பாடுதலேயாம். அசைந்து தீங்கு செய்யமுடியாத அளவுக்கு அவற்றிற்குப் போதைஏறிய பின் பாம்பாட்டி செய்வதுபோல் அவற்றின் கழுத்தைப்பிடித்து நச்சுப் பற்களைப் பிடுங்கிவிடுங்கள். அதன்பின் அவை உங்கள் விளையாட்டுப் பொருட்களாகிவிடும் நீங்கள் விரும்பிய வாறு கையாளலாம்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## பொதுக் கூட்டம்

(அரியாலை)

அரியாலைபனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் எதிர் வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்; நாயன் மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

(சே-106)

# பல்கலைக்கழகத்தை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

## மாணவர் ஒன்றியம் துணைவேந்தருக்குக் கடிதம்

கடந்த10 07. 2001அன்று பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளதாக பத்திரிகைவாயிலாக அறிவிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை பல்கலைக்கழகம் திறக்கப்படவில்லை இதனால் மாணவர்கள் அனைவரும் நிர்க்கதியான நிலையில் வீதியில் விடப்பட்டுள்ளனர். இதனால் பல்கலைக்கழக மாணவர்களின் விரிவுரைகள் பரீட்சைகள் என்பன முற்றாகத் தடைப்பட்டுள்ளது. மாணவர்கள் பெரும் மனஅழுத்தத்திற்குள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் துணைவேந்தருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றியத் தலைவர் செ.கஜேந்திரனால் கையெழுத்திட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

பல்கலைக்கழகத்தில் எவ்வித கலவரங்களும் இடம்பெறவில்லை. சொத்துக்கள் சேதமாக்கப்படவில்லை இந்நிலையில் எவ்வித காரணங்களும் இன்றி பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது. எனவே உடனடியாக பல்கலைக்கழகத்தினை திறக்க தாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்வதோடு பல்கலைக்கழகம் மூடப்பட்டமைக்கான காரணம் தெளிவாக எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட வேண்டும்:

அத்துடன் மாணவர்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் மிகவும் பதற்றத்துடனும் அச்சத்துடனும் அமைதியின்றி காணப்படுகின்றார்கள். இந்நிலைமையில் தொடர்ந்து அமைதியாக கல்வி கற்க முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே பாதுகாப்பான அச்சமற்ற அமைதியான சூழ்நிலையை தாங்கள் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டதோடு ஒரு சில தினங்களுக்குள் காரணமின்றி மூடப்பட்ட பல்கலைக்கழகத்தினை அரசாங்கம் திறக்க வேண்டும் தவறும்பட்சத்தில் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பொறுப்பல்ல என்பதனையும் அத்தகைய பாரதூரமான விளைவுகளுக்கு அரசாங்கமும் பல்கலைக்கழகத்தினை மூட ஆலோசனை வழங்கியவர்களுமே பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்பதனை மிகவும் மனவருத்தத்துடன் தெரியப்படுத்த விரும்புகின்றோம் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# மிருசுவில் கொலை சந்தேகநபர்கள் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்

(மந்திகை)

மிருசுவில் படுகொலைகள் தொடர்பான வழக்கு விசாரணை சாவகச்சேரி நீதவான் அ.ஆனலிங்கம் பிறேம்சங்கர் முன்னிலையில் நேற்றுக் காலை எடுத்துக்கொள்ளப்பட்டது;

இதன்போது சந்தேக நபர்களான 14 படையினரும் நீதிமன்றில் பொலிசாரினால் ஆஜர்படுத்தப்பட்டனர். இதனால் நீதிமன்ற சுற்றாடலில் இராணுவம் மற்றும் பொலிஸாரின் பலத்தபாதுப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணையின் போது மேல் நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் குறிந்த வழக்கு அனுராதபுர நீதிமன்றத்துக்கு மாற்றப்படுவதாக நீதவான் தெரிவித்தார்.

இதனை அடுத்து சந்தேக நபர்களை எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி அனுராதபுர நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்ட நீதவான். அவ்வாறு ஆஜர்படுத்த முடியாது போகும் பட்சத்தில் சாவகச்சேரி நீதிமன்றில ஆஜர்படுத்தும்படியும் அதுவரையில் சந்தேக நபர்களை யாழ் சிறைச்சாலை அதிகாரிகளிடம் ஒப்படைக்கும்படியும் உத்தரவிட்டார்.

விசாரணைகளின் போது கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் கதறி அழுதனர் இதனால் சிறிது நேரம நீதிமன்ற நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்தன.

இதேவேளை இச்சம்பவங்களை புகைப்படம எடுத்துக்கொண்டிருந்த யாழ் ஊடகவியலாளர் சங்கத்தலைவரும் ஐ பி சி. செய்தியாளருமாகிய தவச்செல்வம் முதலாவது சந்தேக நபரால் தாக்கப்பட்டார். இதனை அவதானித்த நீதவான் சந்தேக நபரை கடுமையாக எச்சரித்ததுடன் சந்தேக நபர் செய்தியாளரிடம் மன்னிப்புக் கோரினார்.

மேலும் இவ்வழக்கு விசாரணையை அனுராதபுரத்திற்கு மாற்ற வேண்டாமென கோரும் மனு ஒன்று உறவினர்களால் நீதவானிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

(ந-5 23 42 43 52)

---

முஸ்லிம

யில் இருந்த 5 வீடுகளும் சேதமாகியுள்ளது;

இச்சம்பவத்தை அடுத்து கல்முனைப் பொலிசாரின் தீவிர தேடுதலின் போது வெடிக்காது இருந்த மற்றொரு குண்டை மீட்டதாகவும், அரசியலில் ஏற்பட்ட போட்டியே இச்குண்டுவெடிப்பிற்குக் காரணம் என்றும் கல்முனைப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்தை அடுத்து அங்கு பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது; (வ)

---

1983 யூலை

மூர்த்தி, ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

இந்த ஆணைக்குழுவில் இளைப்பாறிய பிரதம நீதியரசர் எஸ்.சர்வானந்தா ஜனாதிபதி சட்டத்தரணிகளான எம் என் சுலைர் மற்றும் சகாபத்து ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்த ஆணைக்குழுக் குழு ஆடி இனக்கலவரம் ஏற்படுவதற்குரிய காரணங்களை கண்டறிவதுடன் அக்கலவரத்தின் போது கொல்லப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பாகவும் ஆலோசனை செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது (வ)

---

சு. வை. அதிகாரியாக

பாலும வ-கி- மா- ஆளுநர், யாழ் மாநகர முதல்வர் உள்ளிட்ட பலருக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்நிலையில் டாக்டர் தெய்வேந்திரனை உடனடியாக சேவையில சேர்த்துக்கொள்ளுமாறு ஆளுநர் அசோகா ஜயவர்த்தனா மாநகர ஆணையாளருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்

இவ்வுத்தரவின் பிரகாரம் நேற்று டாக்டர் தெய்வேந்திரன் தனது பணியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இனால் யாழ். மாநகர சபையில் ஒர் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. புதிய ஆணையாளராக நியமனம பெற்ற எஸ் இராமலிங்கம் சிறந்த - நேர்மையான நிர்வாகியெனப் பலராலும் பாராட்டப்பட்டவர். அவர் ஆணையாளராகப் பதவியேற்ற ஒருசில மாதங்ளில் சபையில் சுமுகநிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் சுமுகநிலையை ஏற்படுத்திய, மாநகர முதல்வர் என்.ரவிராஜ். ஆணையாளர் இராமலிங்கம் ஆகியோருக்கு பலதரப்பாலும நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

---

## ஆங்கில தின போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கிலதினப் போட்டிகள் இன்றும் எதிர்வரும் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன. (உ-6)

---

கொழும்பு...

சட்டத்தின் 45வது சரிவின் பிரகாரம் மேதின ஊர்வலங்கள்தவிர ஏனைய ஊர்வலங்கள் தடைசெய்யப்படுவதாக பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு அறிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக்கட்சி மற்றும் தமிழ்க் கட்சிகள் உட்பட அனைத்து எதிர்க்கட்சிகளும் நடத்தின்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு நான்குலட்சம் பொது மக்களுடன் பாடசாலை மாணவர்களையும் ஈடுபடுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும், இதனால் பாரிய கலவரமொன்று ஏற்படலாமென்று அமைச்சர் ஒருவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

நீர்கொழும்பு வீதி, கண்டி வீதி, ஹவ்லொக் வீதி, ஹிகடுவ வீதி, ஆமர்வீதி, ககுவெல வீதி ஆகியவற்றிலிருந்து பேரணிகள் ஆரம்பமாகி கொழும்பு மாநகரை வந்தடையவுள்ளது.

பொலிஸ்மா அதிபர்லக்கி கொடித்துவக்கின் தடைஉத்தரவை தாம் மீறவில்லைஎன்றும் சுமுகமாகஅமைதி ஊர்வலங்களுக்கு இத்தகைய தடைகள் ஏதும்இல்லை என்றும் 45வதுபிரிவு கூறுவதாக காமினி அத்துகோறளை பொலிஸ்மாஅதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

இதேவேளை இன்றுகடைகள் எதையும் பூட்டவேண்டாம்மென்றும் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லுமாறும் அரசுகேட்டுக்கொண்டுள்ளதுடன் எந்தநிலைமையையும் சமாளிக்கக் கூடிய வகையில்பொலிஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். (வ)

---

# அவசரகாலச் சட்டம் செயலிழந்ததால் இராணுவ சந்தேக நபர்களை ராணுவ காவலில் வைக்க முடியாது

(கொழும்பு)

2000ம் ஆண்டு மே மாதம் 3ந் திகதி கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்டத்தின்படி கடமை நேரத்தில் இராணுவ வீரர் ஒருவர் குற்றச் செயலில ஈடுபட்ட சந்தேக நபராகக் காணப்பட்டால், அவரை இராணுவக் காவலில் வைப்பதற்கு நீதிமன்று அனுமதிக்க முடியும். ஆனால் அவசர காலச் சட்டம் காலாவதியாகியுள்ளதால் இராணுவச் சந்தேக நபர்களை இராணுவக் காவலில் வைக்க முடியாதெனவும், அவர்களைச் சிறையிலேயே தடுத்துவைக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுளளது.

இச்சட்டப் பிரச்சினை நேற்று மட்டக்களப்பு நீதிமன்றில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அவசரகாலச்சட்டம் அமுலில் இல்லாதபடியால் மீசாலை படுகொலைச் சந்தேக நபர்களான 14படையினரும் யாழ் சிறைச்சாலையிலும்.

மட்டக்களப்பு சித்தாண்டி படுகொலைச் சந்தேக நபர்களான ஆறு படையினரும் மட்டு சிறைச்சாலையிலும் தடுத்துவைக்கப்பட்டுளளமை இங்கு குறிப்பிடத்தக்கது. [ந]

---

ராஜா
யாழ்ப்பாணம்
கடைசி வாரம்
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில்)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
சிட்டிசன்
தினசரி: 10-30, 2-30 [பு நே]
சனி ஞாயிறு 10-30, 2-00, 5 00 [பு. நே]
(கி-2125)

விற்பனைக்கு
A30 கார் (4 கதவுள்ள) விற்பனைக்குண்டு
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
நிக்ஷன் பல்பொருள் வாணிபம்
பஸ் நிலையம்,
அச்சுவேலி. (கி-2242)

தங்க நகையுலகில் தமக்கென தனியிடம் பிடித்தவர்கள்
வினோ நகைப் பூங்கா
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. P - Fax - 2824 (சி-5 23)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது